சுருக்கம்

பொதுப்பணித்துறை – 2008 - 2009ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டங்கள் – வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் இரண்டு அறைகளுடன் கூடிய ஆய்வு மாளிகை கட்டுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித் (ஓய்2) துறை

அரசாணை (நிலை) எண்.150 நாள் : 21.5.2008

வைகாசி – 8

திருவள்ளுவர் ஆண்டு 2039

படிக்க :

1. தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை-5 கடித எண்.உசெபொ/டி12/52640/ 2007, நாள் 11.1.2008.
2. நிதித்துறை கடித எண்.83463/நிதி (வசெ II), நாள் 1.4.2008.
3. தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை–5 கடித எண்.உசெபொ/டி12/ 52640/ 2008, நாள் 17.4.2008.

---------------

ஆணை :

தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்கள் வேலூர் மாவட்டத்தில் உள்ள குடியாத்தம் ஒரு பெரிய நகரம் என்றும், குடியாத்தம் அருகே மோர்தானா அணை உள்ளதாகவும் இதுவரை ஆய்வு மாளிகை ஏதும் இங்கு கட்டப்படவில்லை என்றும் மிக முக்கிய பிரமுகர்கள், அரசு உயர் அதிகாரிகள் அடிக்கடி இங்கு வருவதால் இரண்டு அறைகள் கொண்ட ஆய்வு மாளிகை அவசியம் தேவைப்படுவதாகவும் ஆய்வு மாளிகை கட்டுவதற்கு நிலம் உள்ளது என்றும் எனவே, வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் இரண்டு அறைகள் கொண்ட ஆய்வு மாளிகை ரூ.21.00 இலட்சம் மதிப்பில் கட்ட தீர்மானித்துள்ளதாகவும் இம்மதிப்பீடு 2008 – 2009ஆம் ஆண்டு விலை விகிதத்தின்படி தயாரிக்கப்பட்டுள்ளது எனத்தெரிவித்து இக்கருத்துருவிற்கு நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மேற்கூறிய கருத்துரு நிதி நிலைக் குழுவின் முன் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டது. நிதி நிலைக் குழு மேற்கூறிய கருத்துருவிற்கு 2008 – 2009ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் ஒப்புதல் வழங்கியுள்ளது.

3. அதன்படி, வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் ரூ.21.00 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு அறைகள் கொண்ட ஆய்வு மாளிகை 2008 –2009ஆம் ஆண்டிற்கான பகுதி II

திட்டத்தின் கீழ் கட்ட நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது. இப் பணிக்கான மதிப்பீட்டில் சில்லரை செலவினம் எதிர்பாரா செலவினம் மேற்பார்வை செலவினம் ஆகியவைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள செலவினங்கள் மொத்தத்தில் 2.5 சதவீதத்திற்கு மேல் அதிகரிக்கக் கூடாது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட இச்செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் கீழ் பற்று வைக்கப்படும் :-

4059 – பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு – 01 – அலுவலகக் கட்டடங்கள் – 051 கட்டுமானம் - பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநில திட்டம் - JJ பொதுப்பணிகள் –16 பெரும் பணிகள்.
(து.தொ.கு.4059-01-051 JJ 1605)

5. இச்செலவினத்தை தற்பொழுது நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி செலவு செய்ய தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

6. மேலும் பார்வை 3ல் படிக்கப்பட்ட தலைமைப் பொறியாளரின் கடிதத்துடன் பெறப்பட்ட மதிப்பீட்டிற்கு அரசு ஒப்புதல் அளிக்கிறது. அதன் நகல் ஒன்று இவ்வாணையுடன் திருப்பியனுப்பப்படுகிறது.

7. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா.எண். 155/DS)AR)/ PW-I/2008-1, நாள் 7.5.2008 பெறப்பட்டு, வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.ஆதிசேஷையா
அரசு செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை 5.(இ)
மாநிலக் கணக்காயர், சென்னை 18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை 5.
கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை,
கட்டடம் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம், வேலூர் 1.
நிர்வாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை,
கட்டடம் கட்டுமானம் கோட்டம், வேலூர்.
நகல் :
நிதி (பொதுப்பணி I- வ.செ.1) துறை, சென்னை 9.
பொதுப்பணி (ஐ.சிறப்பு) துறை, சென்னை 9.
இருப்பு கோப்பு / உதிரி.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.